*அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ…உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.*

*நியாயாதிபதிகள் 9:12*

**தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்**

# புனே சேகரம்

***ஜனவரி* - 2021** ***செய்தி மலர்* - 3**

# பெதஸ்தா C.S.I. ஆலயம்



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,**

நம்மை பெலப்படுத்துகிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு முழுவதும் நம்மை வழி நடத்தி 2021 ஆம் ஆண்டை காணச் செய்த என் தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள். இந்த புதிய ஆண்டு நமக்கு ஆசிர்வாதமாய் அமைய நம்மை அர்ப்பணித்து புதிய தீர்மானத்தோடு, புதிய திட்டங்களோடு பிரவேசிப்போம்.

**“அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.”**
**நியாயாதிபதிகள் 6:14**

கிதியோன் என்றால் வெட்டுபவர், தாக்குபவர் என்று பொருள். இவர் உற்சாகமான உழைப்பாளி. தனது விளைச்சலை மீதியானிடமிருந்து காப்பாற்ற முயற்சி செய்தார். தன்னைக் குறித்து சிந்தித்ததை விட அதிகமாக மக்களின் அவல நிலைமையை எண்ணி வருந்தினார். தெய்வ பணிக்காக அழைக்கப்பட்டவர். கோதுமையின் மேல் அக்கறை உடைய மனிதனை தனது களஞ்சியத்தில் மேல் அக்கறை உடையவனாக இருக்க முடியும் என தேவன் அறிவார். அழைப்பின் காலத்தில் மிகவும் தாழ்மை உள்ளவராக நடந்து கொண்டார். உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ என்று கர்த்தர் கூறும்போது, எனக்கு என்ன பலம் இருக்கிறது என்று யோசிக்கிறார். கர்த்தரிடம் அடையாளம் கேட்டாலும், தன்னை அர்ப்பணித்து ஆண்டவருடைய வார்த்தைக்கு ஒப்புக்கொடுத்து சென்றதினால் மிகப்பெரிய வெற்றியைப் பெற முடிந்தது.



நம்முடைய வாழ்க்கையிலும் இந்த புதிய ஆண்டிற்குள்ளாக பிரவேசித்து இருக்கிற நமக்கு கிதியோனைப் போல நாமும் வெற்றி பெற அவர் என்ன செய்தார் நாமும் என்ன செய்ய வேண்டும் என்று தியானிப்போம்.

**1. மீதியாணியர்:**

மீதியானியர்கள் ஆபிரகாம் மணந்த கேந்தூராளின் பிள்ளைகளின் வம்சத்தில் வந்தவர்கள் (ஆதியாகமம் 25:1-4). இவர்களை ஆபிரகாம் ஈசாக்கு இடமிருந்து பிரித்து கிழக்கு தேசத்திற்கு அனுப்பினார் (ஆதியாகமம் 25:1-6). யோசேப்பு இந்த மீதியானிய வணிகர்களின் கையில் தான் விற்கப்படுவதாக (ஆதியாகமம் 37 :23-28) பார்க்கிறோம். தேவன் மீதியானியர்களை அமலேக்கியரோடும், கிழக்கத்திப் புத்திரரோடும் சேர்ந்து ஏழு வருஷங்கள் இஸ்ரவேலரை கொள்ளையடித்து சிறுமைப்படுத்தும் படி அனுமதித்தார். (நியாயாதிபதிகள் 6:1) மீதியானியரின் சுபாவம் இஸ்ரவேலர்களுக்கு நல்ல விளைச்சல் விளைந்து இருக்கும்போது அமலேக்கியரையும், கிழக்கத்திப் புத்திரரையும் கூட்டிவந்து வெட்டுக்கிளிகளை போல விளைச்சலை அழித்து போடுவார்கள். மேலும் அவர்களின் ஆடு, மாடுகளையும், கழுதைகளையும் அழிக்காமல் போக மாட்டார்கள். அவர்களும் அனுபவிக்க மாட்டார்கள். மற்றவர்களையும் அனுபவிக்க மாட்டார்கள். இதனால் இஸ்ரவேலர்கள் மீதியானியருக்கு பயந்து மலைகளிலும், குகைகளிலும், கெபிகளிலும் போய் தங்குவார்கள்.

தேவனுடைய அழைப்பு கிதியோனுக்கு வந்துவிட்டது. இனி போராட வேண்டும். அதற்கு முன் தன்னை ஆயத்தமாக்க, தன்னை தூய்மைப் படுத்த தன்னுடைய தோப்பிலேயே தொடங்கினார். தோப்பு விக்கிரகங்களையும், அதன் கூடாரங்களையும் வெட்டி வீழ்த்தினார் (நியாயாதிபதிகள் 6:28-32). அதுபோன்று நம்முடைய வாழ்விலும் கர்த்தருக்கு பிரியம் இல்லாத காரியங்களை அகற்ற வேண்டும். மீதியானியரும் , அமலேக்கியரும், கிழக்கத்திய புத்திரரும் ஏகமாய் யெஸ்ரயேல் பள்ளதாக்கில் பாளையம் இறங்கினர். யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு வளமையான பள்ளத்தாக்கு. இந்தப் பள்ளத்தாக்கின் விளைச்சல் ஒரு லட்சம் பேரை ஒரு வருஷத்திற்கு போஷிக்க போதுமானது. இதை அழிக்க தான் அந்தப் பள்ளத்தாக்கில் இறங்கினர். ஆவியானவரால் கிதியோன் பலனடைந்து, எக்காளம் ஊதி அபியேஸ்ரியரையும், மனாசே, ஆசேர், செபு யோன், நப்தலி நாட்டில் உள்ளவர்களையும் அழைத்து தன்னோடு கூட்டினான்.

**2. கிதியோன் கேட்ட அடையாளம் (நியாயாதிபதிகள் 6:40)**

மயிர் உள்ள ஒரு தோலை களத்தில் போடுகிறேன். தோலின் மேல் பனி பெய்து பூமி எல்லாம் காய்ந்து இருக்க வேண்டும் என்றும், மறுநாள் இரவு தோல் மாத்திரம் காய்ந்து இருக்கவும், பூமி எங்கும் பனி பெய்யவும் கட்டளையிட வேண்டும் என்றும் தேவனிடம் கிதியோன் கேட்டான். இதில் கூறப்பட்ட தோல் நமது நீதியை குறிப்பதாகவும், பனியானது கர்த்தருடைய வார்த்தைகளை குறிப்பதாக உள்ளது.

**3. கர்த்தர் காட்டிய ரகசியம் (நியாயாதிபதிகள் 7:1-7)**

கிதியோனும் அவனோடு இருந்த ஜனங்களும் "ஆரோத்" நீரூற்றின் பக்கத்தில் பாளயமிறங்கினார்கள். ஆரோத் என்றால் “இருதயத்துடிப்புள்ள” என்று பொருள். தேவனுடைய பிரசன்னத்தில் எந்த மாம்சமும் பெருமை பாராட்டுதல் கூடாது.

கிதியோன் இடம் அவனுடைய ஆட்களின் எண்ணிக்கையை 32,300 லிருந்து 300 ஆகக் குறைக்கும் படி கட்டளையிட்டார்.

**இது நான்கு சத்தியங்களை வெளிப்படுத்துகிறது:**

a) தேவனால் அர்ப்பணிப்புள்ள சிறு கூட்டம் பெரிய காரியங்களை செய்ய முடியும். இது பலத்தினாலும் அல்ல. பராக்கிரமத்தினாலும் அல்ல. அவருடைய ஆவியினாலும் மட்டுமே ஆகும் (சகரியா 4:6)

b) ஆவியில் விழிப்புடனும், அர்ப்பணிப்புடனும் வெளிப்படுதலே தேவனின் விருப்பம். பெரிய எண்ணிக்கையில் ஆட்கள் இருப்பதல்ல. (வெளி 3:4,5)

c) நம்முடைய வாழ்வில் ஏற்படும் சவால்களை சந்திக்க நமக்குத் தேவையான பலமும், ஊக்கமும் தேவனிடம் மட்டுமே உண்டு (பிலிப்பியர் 4:13)

d) நம்முடைய சாதனையை பற்றிய பெருமை, நிச்சயமாக நாம் தேவனுடைய வல்லமையையும், உதவியும் பெறுவதற்கு தடையாகும். (நீதிமொழிகள் 6 : 13, 15)

கர்த்தர் கிதியோன் இடம் நீ எழுது எதிரிகள் சேனை இடத்திற்கு போ. அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன். நீ பயப்படாமல் நீயும் உன் வேலைக்காரன் பூராவும் போங்கள் என்று கூறுகிறார். பூரா என்றால் கிளை என்று பொருள். எதிரிகளின் சேனை வெட்டிக்கிளி களைப் போல திரளாய் படுத்து இருக்கிறதை கிதியோனும் பூராவும் பார்த்தனர்.

இதிலே நாம் அறிய சத்தியம் என்னவென்றால். 2 கொரிந்தியர் 4:6,7ல் கூறியுள்ளதை போல மண்பாண்டங்கள் தேவ மகிமை உடையதாக இருந்தது. மண்பாண்டம் என்பது மாமிசத்தை குறிக்கிறது. நமது மாமிசம் சிலுவையில் அறைய பட வேண்டும் (ரோமர்7:23) கவலை, கோபம், எரிச்சல், மன்னிக்க முடியாத மனது, பொருட்கள் குவிப்பது, சொத்துக்கள் ஆசைப்பட்டு சேர்ப்பது, இச்சை, பதவி, பண ஆசை, பெருமை இவையெல்லாம் சிலுவையில் அறையப் படவேண்டும். அப்போது கர்த்தரின் வெளிச்சம் நம் வாழ்க்கையில் பிரகாசிக்கும். கிதியோனின் விசுவாசத்தை பார்த்த தேவன் அவனை கனப்படுத்தினார். இந்த யுத்தத்தின் வெற்றிக்கு காரணம் நான் உன் கூட இருக்கிறேன் என்ற தேவனின் வார்த்தைதான். சுக்தோத்தின் மனுஷர்களின் மூப்பர்களை பிடித்து முள்ளு களாலும், நெருஞ்சில் களாலும் புத்தி வர பண்ணினான். பெனு வேலின் கோபுரத்தை இடித்து அவ்வூர் மனுஷரையும் கொண்றான். கடைசியாக மீதியானியரின் 2 ராஜாக்களான சேபாவையும், சல்முனாவையும் கொன்று போட்டான். இஸ்ரவேலர்கள் வெற்றி பெற்றார்கள்.

அன்பானவர்களே இந்த புதிய ஆண்டிலும் கிதியோனைபோல நாமும் நம்மை முழுமையாக தேவனிடம் அர்ப்பணிப்போம். அவருடைய வார்த்தையின்படி நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போம். உடைக்கப்பட்ட பானைகளை போல நாம் உடைக்கப்பட்டு பற்றி எரியும் தீப்பந்தங்களாக இந்த புதிய ஆண்டில் எழும்பி பிரகாசிப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

Dear beloved in Christ,

Wishing you a very happy New Year in the name of our Lord Jesus Christ who strengthens us.

Let us thank the Lord who has led us throughout last year and helped us to see 2021. Let us enter this year by committing ourselves to new plans and new decisions so that the new year is blessed.

**And the LORD looked upon him, and said, Go in this thy might, and thou shalt save Israel from the hand of the Midianites: have not I sent thee?**

**Judges 6:14**

Gideon means 'Great warrior' or 'one who cuts down'.

He is a good worker. He tried to save the crops from the Midianites. He thought about the pity state of his people more than thinking about himself. He had God's calling to do God's work. The Lord knows if a person who cares for the wheat will have concern for His barn. Gideon was so humble during his period. When the Lord asked Gideon to go with the strength he had, he humbled himself and admitted he was weak. Though he asked for signs, he surrendered to God's word and went. And this led to a great victory. Let us who have entered this new year, meditate upon the word of God and learn what Gideon did and what must be followed from Gideon's life.

**1. Midianites:**

Midianites are the descendants of Keturah, wife of Abraham (Genesis 25: 1-4). Abraham sent them to the land of the east, away from his son Isaac (Genesis 25: 1-6). We see that, Joseph was sold to these Midianite merchants (Genesis 37: 23-28). The Lord allowed Midianites, Amalekites, and other people of the east to come up and invade Israelites for 7 years (Judges 6: 1-3).

Whenever the Israelites planted their crops, the Midianites, Amalekites, and other people of the east came up and invaded them, destroying the produce of the land like a great swarm of locusts. They left Israel with no sustenance, neither sheep nor oxen nor donkeys. So, the Israelites were afraid of Midianites. They hid themselves and stayed in mountains and caves.

Gideon had received God's call and so had to fight the Midianites now. Before that, to sanctify himself he started the cleansing from his own house. He tore down his father's altar to Baal and cut down the Asherah pole beside it (Judges 6:28-32).


In the same way, we must remove the unwanted things from our lives. Midianites, Amalekites and the people of the east came for battle in Jezreel valley. This valley was able to feed one lakh people throughout the year. They had come for battle to destroy this place. Through the Holy Spirit Gideon was filled with power, trumpets were blown to call the men of Abiezer, men of Manasseh, the men of Asher, Zebulun and Naphtali.

**2. Gideon asks for Sign from God (Judges 6:40)**

Gideon asked God that he will place a fleece of wool on the threshing floor, there must be dew only on the fleece and all the ground must be dry and the next day the dew should be on the ground and fleece must be dry. Here, the fleece refers to our righteousness and the dew refers to God's word.

**3. God shows the secret (Judges 7:1-7)**

Gideon and all the men with him camped beside the spring of Harod. Harod means 'trembling with fear'. None of the flesh can be proud in the presence of God. God commanded Gideon to shrink the army from 32,300 to 300 people.



**It reveals 4 important truths:**

a) A smaller group that has surrendered to God's will can do great deeds. Not by might nor by power, but by God's Spirit (Zechariah 4:6)

b) God desires us to be vigilant in spirit and yield ourselves to His work. Large number of people are not needed. (Revelation 3:4,5)

c) The strength and encouragement needed to face the challenges in our life is provided only by our God. (Phillipians 4:13)

d) The pride from our success is always a hurdle to receive God's power and help. (Revelation 6:13,15)

God told Gideon to get up and go with his servant Purah into the camp of the enemies for he had given them into Gideon's hands and not to be afraid. Purah means 'branch'. The enemies had settled down thick as locusts.

**4. Gideon's battle march and the victory (Judges 7:16-21)**

Gideon divided the three hundred men into three companies and placed trumpets and empty jars in the hands of all of them, with torches inside. With 300 men, 300 trumpets, 300 torches, 300 jars Gideon had to defeat 1,35,000 men. They did not have any other weapon. Gideon and the hundred men with him at the beginning of the middle watch, blew their horns and broke the jars that were in their hands. “A sword for the LORD and for Gideon!” they shouted.

The truth that we learn from the above described incident: As it is said in 2 Corinthians 4:6,7 The glory of God was filled in jars of clay. Jars of clay refers to flesh. Our flesh has to be crucified on the cross (Romans 7:23). Sorrow, anger, frustration, unforgiving heart, materialism, gathering more assets, lust, love towards earthly positions of authority and money, pride must be crucified on the cross. Then the light of our Lord will shine in our lives. The Lord saw the faith of Gideon and rewarded him. The reason for the victory of this battle was that God was with him. He took the elders of the town and taught the men of Sukkoth a lesson by punishing them with desert thorns and briers. He also pulled down the tower of Peniel and killed the men of the town. Lastly Gideon killed 2 Midianite leaders named Zebah and Zalmunna. The Israelites were victorious!

Dear beloved, as we are in this new year, let us surrender ourselves completely to the Lord like Gideon. Let us submit ourselves to walk according to God's word. Let us enter this new year like the broken jars and be a lighted torch. Let the Lord bless us! Amen!

# திருவசன ஊழியம்

## MEMORY VERSES 2021

### 03-01-2021 இரட்சிப்பின் வெளிப்பாடு

தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.

- லூக்கா 2:31,32

### 03-01-2021 Revelation of Salvation

For my eyes have seen your salvation. Which you have prepared in the presence of all peoples, - Luke 2:31,32

### 10-01-2021 அழைப்பிற்கு உகந்த வாழ்க்கை

நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். - மத்தேயு 7:19

### 10-01-2021 Live Worthy of Your calling

Every tree that does not bear good fruit is cut down and thrown into the fire. - Matthew 7:19

### 17-01-2021 ஞானஸ்நானம்

அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்.

- எசேக்கியேல் 36:25

### 17-01-2021 Baptism

I will sprinkle clean water upon you, and you shall be clean from all your uncleannesses, and from all your idols I will cleanse you.

- Ezekiel 36:25

### 24-01-2021 நீதிக்காக ஒன்றுபடுதல்

நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள். - சங்கீதம் 4:5

### 24-01-2021 Unity for Justice

Offer right sacrifices, and put your trust in the LORD. - Psalm 4:5

### 31-01-2021 ஓய்வுநாள்

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; - எபிரெயர் 10:25(மு)

### 31-01-2021 Sabbath Day

Not neglecting to meet together, as is the habit of some, but encouraging one another.

- Hebrews 10:25(a)

# அனுதின வேத வாசிப்பு பகுதி:

| ஜனவரி | | | | |
|---|---|---|---|---|
| தேதி | காலை | காலை | மாலை | மாலை |
| 1 | ஆதி 1:1 - 2:25 | நீதி 1:1-6 | மத் 1:1 - 2:12 | சங் 1:1-6 |
| 2 | ஆதி 3:1 - 4:26 | நீதி 1:7-9 | மத் 2:13 – 3:6 | சங் 2:1-12 |
| 3 | ஆதி 5:1 – 7:24 | நீதி 1:10-19 | மத் 3:7 – 4:11 | சங் 3:1-8 |
| 4 | ஆதி 8:1 – 10:32 | நீதி 1:20-23 | மத் 4:12-25 | சங் 4:1-8 |
| 5 | ஆதி 11:1 – 13:4 | நீதி 1:24-28 | மத் 5:1-26 | சங் 5:1-12 |
| 6 | ஆதி 13:5 – 15:21 | நீதி 1:29-33 | மத் 5:27-48 | சங் 6:1-10 |
| 7 | ஆதி 16:1 – 18:19 | நீதி 2:1-5 | மத் 6:1-24 | சங் 7:1-17 |
| 8 | ஆதி 18:20 – 19:38 | நீதி 2:6-15 | மத் 6:25 – 7:14 | சங் 8:1-9 |
| 9 | ஆதி 20:1 – 22:24 | நீதி 2:16-22 | மத் 7:15-29 | சங் 9:1-12 |
| 10 | ஆதி 23:1 – 24:51 | நீதி 3:1-6 | மத் 8:1-17 | சங் 9:13-20 |
| 11 | ஆதி 24:52 – 26:16 | நீதி 3:7-8 | மத் 8:18-34 | சங் 10:1-15 |
| 12 | ஆதி 26:17 – 27:46 | நீதி 3:9-10 | மத் 9:1-17 | சங் 10:16-18 |
| 13 | ஆதி 28:1 – 29:35 | நீதி 3:11-12 | மத் 9:18-38 | சங் 11:1-7 |
| 14 | ஆதி 30:1 – 31:16 | நீதி 3:13-15 | மத் 10:1-26 | சங் 12:1-7 |
| 15 | ஆதி 31:17 – 32:12 | நீதி 3:16-18 | மத்10:27 – 11:6 | சங் 13:1-6 |
| 16 | ஆதி 32:13 – 34:31 | நீதி 3:19-20 | மத் 11:7-30 | சங் 14:1-7 |
| 17 | ஆதி 35:1 – 36:43 | நீதி 3:21-26 | மத் 12:1-21 | சங் 15:1-5 |
| 18 | ஆதி 37:1 – 38:3 | நீதி 3:27-32 | மத் 12:22-45 | சங் 16:1-11 |
| 19 | ஆதி 39:1- 41:16 | நீதி 3:33-35 | மத் 12:46 – 13:23 | சங் 17:1-15 |
| 20 | ஆதி 41:17 – 42:17 | நீதி 4:1-6 | மத் 13:24-46 | சங் 18:1-15 |
| 21 | ஆதி 42:18 – 43:34 | நீதி 4:7-10 | மத் 13:47 – 14:13 | சங் 18:16-34 |
| 22 | ஆதி 44:1 – 45:28 | நீதி 4:11-13 | மத் 14:14-36 | சங் 18:35-50 |
| 23 | ஆதி 46:1 – 47:31 | நீதி 4:14-19 | மத் 15:1-28 | சங் 19:1-14 |
| 24 | ஆதி 48:1 – 49:33 | நீதி 4:20-27 | மத் 15:29 – 16:12 | சங் 20:1-9 |
| 25 | ஆதி 50:1 – யாத் 2:10 | நீதி 5:1-6 | மத் 16:13 – 17:9 | சங் 21:1-13 |
| 26 | யாத் 2:11 – 3:22 | நீதி 5:7-14 | மத் 17:10-27 | சங் 22:1-18 |
| 27 | யாத் 4:1 – 5:21 | நீதி 5:15-21 | மத் 18:1-22 | சங் 22:19-31 |
| 28 | யாத் 5:22 – 7:24 | நீதி 5:22-23 | மத் 18:23 – 19:12 | சங் 23:1-6 |
| 29 | யாத் 7:25 – 9:35 | நீதி 6:1-5 | மத் 19:13-30 | சங் 24:1-10 |
| 30 | யாத் 10:1 – 12:13 | நீதி 6:6-11 | மத் 20:1-28 | சங் 25:1-11 |
| 31 | யாத் 12:14 – 13:17 | நீதி 6:12-15 | மத் 20:29 – 21:22 | சங் 25:12-22 |

# மத்தேயு

## A) ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்

1. இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் இடம்பெற்றுள்ள பெண்கள் யாவர்?
   Who are the women in the genealogy of Jesus Christ?

2. யூதேயாவில் ஏரோதின் பட்டத்துக்கு வந்து அரசாண்டது யார்?
   Who came to the throne of Herod in Judea and ruled?

3. இயேசுவின் கீர்த்தி முதன் முதலில் எந்த நாட்டில் பிரசித்தமாயிற்று?
   In which country was the fame of Jesus first spread?

4. சிறுபிள்ளைகள் இயேசுவிடம் வர தடை செய்தது யார்?
   Who forbade little children to come to Jesus?

5. சிறியரின் தேவதூதர்கள் பரலோகில் எப்போதும் யாரை தரிசிக்கிறார்கள்?
   Whom do the Syrian angels always see in heaven?

6. மத்தேயுவில் மீன் பற்றிய உவமை மற்றும் நிகழ்வுகள் எத்தனை?
   How many parables and events about the fish in Matthew?

7. நியாயத்தீர்ப்பில் செம்மறியாடுகள் கூட்டத்தில் நிற்க எத்தனை காரியம் கொடுக்கப்பட்டுள்ளது?
   How many things are given to stand in the flock of sheep during judgement?

8. இயேசுவின் வம்சவரலாற்றில் ஒளிந்திருக்கும் ஆரோனின் மாமனார் பெயர் என்ன?
   What is the name of Aaron's father-in-law hidden in the genealogy of Jesus?

9. உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள் யார்?
   Who are those who claim that there is no resurrection?

10. கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிப்பது எது?
    Which shines from the east to the west?

11. இயேசு சிலுவையில் அறையப்படும் முன் சீஷர்களும், இயேசுவும் பாடிய கடைசி பாட்டு எது?
    What was the last song that the disciples and Jesus sang before Jesus was crucified?

12. பிதாவின் சித்தத்தை செய்கிறவர்களை யாருக்கு இயேசு ஒப்பிடுகிறார்?
    To whom does Jesus compare those who do the will of the Father?

**B. <u>கண்டுபிடிக்கவும் (Find out)</u>**

a) 5+ 5 = 10+1=11
b) 2-1=1
c) 1+1+1=3.

## BIRTHDAYS




9 Jan - Mrs. Kiruba Anesh
12 Jan - Mr. Allwynraj Gnana Joseph
13 Jan - Mrs. Vijila Merlin Rose A
28 Jan - Mrs. Deepa Bestlin
29 Jan - Mrs. Siron Mani. S



## WEDDING DAYS

15 Jan - Mr. & Mrs. Giftson Das Wilson
26 Jan - Rev. Soundarapandian

***பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கான வாக்குத்தத்தம்:***

எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. *ஏசாயா 60 :1*

Arise, shine; for thy light is come, and the glory of the LORD is risen upon thee. *Isaiah 60 :1*

**குறிப்பு:**

1. வேதாகமத் தேர்வு முழுதாளில் எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 24-01-2021.
2. நாம் ஒரு வருக்கொருவர் ஆலோசனை பண்ணாமலும், அலைபேசியை பயன்படுத்தாமலும் தாங்களாகவே வாசித்து எழுதவும்.
3. கொடுக்கப்பட்டுள்ள வேத வாசிப்பு பட்டியலில் உள்ள படிதினமும் வேதத்தை வாசித்து வந்தால் ஒரு ஆண்டுக்குள்ளாக வாசித்து முடித்து விடலாம்.

**உங்களுக்காக ஜெபிக்கும்**
**Rev. S. சௌந்திரபாண்டியன்**
**சேகர குரு**
**புனே சேகரம்**